# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2024.03.22 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

***(திருத்தப்பட்டவாறான) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்தியமைப்பதற்கானதொரு சட்டமூலம்***

*யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். ஏ. சுமந்திரன் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2***: இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "*முதன்மைச் சட்டவாக்கமான*") *1958* ஆம் ஆண்டின் *15* ஆம் இலக்க, *ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்* 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, அதன் (1) ஆம் பந்தியின் (ஏ) என்னும் உட்பந்தியினால் ளெியிடப்படுவதற்குத் தேவைப் படுத்தபட்ட தகவல்களின் போதியதானதும் உரியநேரத்திலானதுமான வெளியீட்டையும் வெளிக் காட்டுகையையும் உறுதிப்படுத்துவதாகும்.

***வாசகம் 3***: இவ்வாசகம், 5 ஆம் பிரிவின் (*1*) ஆம் பந்தியின் (ஏ) உட்பந்திக்கான திருத்தங்களுக்கு நேரொத்தவையாகவுள்ள அட்டவணைகளை உட்புகுத்துவதாகும்.

## *1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்தியமைப்பதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

***1.*** இச்சட்டம், *2024* ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***2***. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, (1) ஆம் பந்தியின் (ஏ) என்னும் உப்பந்தியை நீக்கிவிட்டு பின்வருவதுடன் அதனை மாற்றீடுசெய்வதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஏ)

(i) ஒவ்வோராண்டுக்காகவும் நிதியம் தொடர்பில் பெறுகைகளும் கொடுப்பனவுகளும் பற்றிய கூற்றொன்றையும், வருமானமும் செலவினமும் பற்றிய கூற்றொன்றையும், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய கூற்றொன்றையும் தயாரிக்கச் செய்தல் வேண்டும்; அத்துடன்

(ii) ஒவ்வொரு மாதத்துக்காகவும் நிதியம் தொடர்பில் முதலீடுகள் பற்றிய கூற்றொன்றைத் தயாரிக்கச் செய்தல் வேண்டும்; இது, அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல் நிதியத்தின் அலுவலக முறையான வலைத்தளத்தின்மீது வெளியிடப் படுதல் வேண்டும்; முதலீடுகள் பற்றிய அத்தகைய கூற்று, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், இயைபாகவுள்ளவாறாக ஒவ்வொரு முதலீட்டினதும் தொகை, முகப் பெறுமதி, கொள்வனவு விலை மற்றும் சந்தைப் பெறுமதி என்பனவுட்பட, நிதியத்தினால்

முதலீடுசெய்யப்பட்ட பிணையங்களின் வகையையும் இயைபான வேறு தகவல்களையும் தெளிவானமுறையில் அடையாளங்காணுதல் வேண்டும்; அத்துடன்

(iii) ஒவ்வொரு மாதத்துக்காகவும் நிதியம் தொடர்பில் கைதுறத்தல்கள் பற்றிய கூற்றொன்றைத் தயாரிக்கச் செய்தல் வேண்டும்; இது, அடுத்து வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல் நிதியத்தின் அலுவலகமுறையான வலைத்தளத்தின் மீது வெளியிடப்படுதல் வேண்டும். கைதுறத்தல்கள் பற்றிய அத்தகைய கூற்று, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், இயைபாகவுள்ளவாறாக ஒவ்வொரு கைதுறத்தலினதும் தொகை, முகப்பெறுமதி, கைதுறத்தற் பிரதிபயன் மற்றும் சந்தைப்பெறுமதி, (விற்பனைவிலை) தேறிப்பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் என்பனவுட்பட நிதியத்தினால் கையுதிர்க்கப்பட்ட பிணையங்களின் வகையையும், இயைபான வேறு தகவல்களையும் தெளிவானமுறையில் அடையாளங்காணுதல் வேண்டும்; அத்துடன்

(iv) முதலீடுகள் மற்றும் கைதுறத்தல்கள் பற்றிய மாதாந்தக் கூற்றுக்களை நிதியத்தின் வருடாந்த அறிக்கையில் வெளியிடுதல் வேண்டும்; ஆயின், இயைபான ஆண்டுக்கான கூற்றுக்கள் மீளத் தோற்றுவிக்கப்படுவதற்கு மிக்க விரிவகற்சி உடையனவெனத் தீர்மானிக்கப்படுமிடத்து, நிதியத்தின் வலைத்தளத்தில் அத்தகைய மாதாந்தக் கூற்றுக்களுக்கான மீயிணைப்பொன்றை வழங்குதல் இத்தேவைப்பாட்டுக்குப் போதிய இணங்கியொழுகுகையாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(v) ஒவ்வொரு மாதத்துக்காகவும் நிதியம் தொடர்பில் அதன் பிணையங்கள் அலுவல்துறையின் ஒன்றுதிரண்ட ஈட்டுகையையும் இயைபான மாதத்திற்கு முற்போந்த பன்னிரெண்டு மாதங்களுக்கான ஈட்டுகையையும் காட்டுகின்ற அறிக்கையொன்றைத் தயாரிக்கச்செய்தல் வேண்டும்; இது, அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல் நிதியத்தின் அலுவலகமுறையான வலைத்தளத்தின்மீது வெளியிடப்படுதல் வேண்டும். இப்பிரிவின் நோக்கங்களுக்காக "ஈட்டுகை" என்பது, முதலீட்டின்மீதான திரும்பல் வீதம் என்று பொருளாதல் வேண்டும்; அத்துடன்

(vi) இத்திருத்தம் வலுவுக்குவரும் நேரத்தில் அது வெளிக்காட்டுகின்ற தகவல்களுடன் சேர்த்து மேலதிகமாக அத்தகைய வேறு தகவல்களைத் தயாரித்து வெளிக்காட்டுதல் வேண்டும்; அத்துடன் ஒழுங்குவிதி மூலம் அமைச்சரினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, மேலே தரப்பட்டுள்ள தகவல்களுடன் சேர்த்து மேலதிகமாக அத்தகைய தகவல்களை வெளிக்காட்டுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணைகளை உட்புகுத்துதல்

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் முடிவில் பின்வரும் அட்டவணைகளை உட்புகுத்துவன்மூலம் அது இத்தாற்றிருத்தப்படுகின்றது.

## "முதலாம் அட்டவணை

[பிரிவு 5 (1) (ஏ) (ii)]

| முதலீடுகள் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சபிஅஇ* (ISIN) | சாதன வகை (உம்: உண்டியல், முறி) | கொள்வனவுத் திகதி | தொகை | முகப் பெறுமதி | கொள்வனவு விலை | கூப்பன் வீதம் | சந்தைப் பெறுமதி/ விலை** | முதிர்வுத் திகதி | கொள்வனவில் முவஈ *** (YTM) | வேறெவையேனும் இயைபான தகவல்கள் |
| | | | | | | | | | | |
| கையிருப்புக் குறியீடு | கம்பெனியின் பெயர் | பங்குக் கொடுக்கல்வாங்கல் | கொள்வனவுத் திகதி | | தொகை | கொள்வனவு விலை | தொகை எடை வீதமளிக்கப்பட்ட சராசரி விலை (WVA) | | வேறெவையேனும் இயைபான தகவல் | |
| | | | | | | | | | | |

## இரண்டாம் அட்டவணை

| முதலீடுகள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சபிஅஇ* (ISIN) | சாதன வகை (உம்: உண்டியல், முறி) | தொகை | முகப் பெறுமதி | கூப்பன் வீதம் | சந்தைப் பெறுமதி/ விலை** | முதிர்வுத் திகதி | கொள்வனவில் விலை முவஈ *** (YTM) | தேறிப் பெறப்பட்ட இலாபம்/ நட்டம் | வேறெவையேனும் இயைபான தகவல்கள் |
| | | | | | | | | | |
| கையிருப்புக் குறியீடு | கம்பெனியின் பெயர் | பங்குக் கொடுக்கல்வாங்கல் | கொள்வனவுத் திகதி | | தொகை | தொகை எடை வீதமளிக்கப்பட்ட சராசரி விலை (WVA) | தேறிப்பெறப்பட்ட இலாபம்/ நட்டம் | | வேறெவையேனும் இயைபான தகவல் |
| | | | | | | | | | |

* சர்வதேசப் பிணையங்கள் அடையாளங்காண் இலக்கம் (ISIN)

** மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாளாந்த / வாராந்தப் பொருளாதாரச் சுட்டிக்காட்டிகளினால் தீர்மானிக்கப்பட்டவாறு

*** முதிர்வுவரையான ஈட்டுகை (YTM)

*குறிப்பு*

*திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் அல்லது வேறெவையேனும் அரசாங்கப் பிணையங்கள் தொடர்பில், பிணைங்களின் வகை தொடரிலக்கத்தினால் அடையாளங் காணப்படுதல் வேண்டும்.*

*பங்குகள் தொடர்பில், எக்கம்பெனியின் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவோ அக்கம்பெனியின் பெயரினால் பிணைங்களன் வகை அடையாளங் காணப் படுதல் வேண்டும்.*

*வேறெவையேனும் பிணையங்கள் தொடர்பில், அத்தகைய பிணையத்தை வழங்குபவரின் பெயர் தெளிவான முறையில் புலப்படத்தக்கதாகவிருக்கும் அத்தகையவொரு முறையில் பிணையங்களின் வகை அடையாளங் காணப்படுதல் வேண்டுமென்பதுடன் மேற்படி பட்டியல்களுக்கு மிகக் கிட்டியவாறாக நேரொத்ததாகவுள்ள கொடுக்கல் வாங்கலுக்கு இயைபான வேறெல்லாத் தகவல்களும் வெளியிடப் படுதலும் வேண்டும்.".*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.